OS No. 189/2011 நாள்:03.09.2026

**வ.சா 1 அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1,2,5,8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனது தாத்தா காளியண்ணகவுண்டரும், 1வது பிரதிவாதியும் அனுபவித்து வந்த போது தாவா சொத்தில் எனது தாயாருக்கு கூட்டுபங்கு உரிமையாளர் என்ற அந்தஸ்து இல்லை என்றால், சரியல்ல. எனது தாத்தா காளியண்ணகவுண்டர் இறப்பின் போது சுமார் அவருக்கு 70 வயதிருக்கும். எனது தாத்தா காளியண்ணகவுண்டருக்கு இறப்பிற்கு ஒரு வருடத்திற்கு முன்பு வயதோகித்தின் காரணமாக 1வது பிரதிவாதி மட்டுமே தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் ஆகிய அனைத்தும் தனிப்பட வைத்து அனுபவித்து வந்தார் என்றால், சரியல்ல.

2. 1வது பிரதிவாதிக்கு பெரியசாமி, கதிர்வேல் என்ற 2 மகன்களும் மற்றும் கலாராணி, சந்திரா என்ற 2 மகள்களும் உள்ளார்கள் என்றால், சரிதான். கலாராணி தான் எனது மனைவி என்றால், ஆமாம். எனக்கும், எனது மனைவிக்கும் கருத்துவேறுபாடு இல்லை என்றால், சரிதான். எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால், 1983யில் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடந்ததிலிருந்து இன்று வரை எனது மாமனார், மச்சானுடன் சுமூகமான பேச்சு வார்த்தை உள்ளது என்றால், எனது தாயாரின் இறப்பிற்கு பின்னிட்டு இல்லை. எனது தாயார் 2014யில் இறந்தார்.

3.எனது மாமனார் தாவா சொத்தை எவ்வாறு அனுபவித்து வந்தார் என்பது எனக்கு நேரடியாக தெரியும் என்றால், சரிதான். எனது மனைவி, எனது மாமனார் மீது வழக்குதாக்கல் செய்தாரா என்றால், ஆமாம். அ.வ.எண். 210/2009 வழக்கு தாக்கல் செய்திருந்தாரா என்றால், ஆமாம். அந்த வழக்கை என் மனைவி மேல்நடத்தாமல் வாபஸ் பெற்றுக்கொண்டார் என்றால், ஆமாம்.அதற்கு பின்னிட்டு தான் எனது தாயார் இவ்வழக்கை தாக்கல் செய்தார் என்றால், ஆமாம். எனது மனைவி தாக்கல் செய்த வழக்கு விவரம் எனக்கு தாயாருக்கு நன்கு தெரியும் என்றால், எனது தாயாருக்கு தெரியாது. எனது தாயாருக்கு தெரியாது

என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. நான் தான் வேண்டுமென்றே எனது தாயாரை துண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

4.எனது தாத்தா காளியண்ண கவுண்டர் இருந்தபோதும், அவர் இறப்பிற்கு பின்னிட்டு எனது தாயார் கூட்டுபங்குதாராக எக்காலத்திலும் சொத்தை அனுபவிக்கவில்லை என்றால், சரியல்ல. தனக்கு சட்டப்படி சொத்தில் பங்கு இல்லை என்பதால் தான் 1 வது பிரதிவாதியிடமோ, காளியண்ண கவுண்டரிடமோ பங்கு குறித்து எதுவும் கேட்கவில்லை என்றால், சரியல்ல. எனது தாயாருக்கு தாவா சொத்தில் எக்காலத்திலும் பங்கு ஏற்படவில்லை என்றால், சரியல்ல. எனது மாமனாருடன் பேச்சுவார்த்தையில் இருந்த காலக்கட்டத்தில் தாவா 1 வது தாக்கு, 2 வது அயிட்ட சொத்து, 3 வது அயிட்ட சொத்துக்களுக்கு 1 வது பிரதிவாதியான எனது மாமனார் பெயரில் பட்டாஎண்.1143 ன் கீழ் பட்டா ஏற்பட்டு கடந்த 50 வருடங்களாக தனிப்பட்ட முறையில் அவரது அனுபவத்தில் இருந்தது என்றால், சரியல்ல.

5.தாவா 1 வது அயிட்டத்தில் 2 வது தாக்கு,3 வது தாக்குகளில் 1 வது பிரதிவாதியான எனது மாமனார் பெயரில் பட்டாஎண்.299 ன் கீழ் பட்டா ஏற்பட்டு கடந்த 50 வருடங்களாக தனிப்பட்ட முறையில் அவரது அனுபவத்தில் இருந்தது என்றால், சரியல்ல. அதேபோல் தாவா 1 வது அயிட்டம் 4 வது தாக்கு சொத்திற்கு 1 வது பிரதிவாதியான எனது மாமனார் பெயரில் பட்டாஎண்.1109 ன் கீழ் பட்டா ஏற்பட்டு கடந்த 50 வருடங்களாக தனிப்பட்ட முறையில் அவரது அனுபவத்தில் இருந்தது என்றால், சரியல்ல. தாவா 1 வது அயிட்ட 3 வது தாக்கான சொத்தான சர்வே எண்.842/சியில் உள்ள சொத்தானது 1 வது பிரதிவாதி கடந்த 09.06.1983 ஆம் ஆண்டில் கிரயம் பெற்று தனது தனிப்பட்ட சொத்தான அனுபவித்து வருகிறார் என்றால், சரியல்ல.

6.எனது மாமனார் பொறி வியாபாரம் செய்து வந்தார் என்றும், அவரை ஊர் மக்கள் பொறிகாரர் பெருமாள் என்று அழைப்பார்கள் என்றால்,சரிதான். எனது மாமனார் பொறிவியாபாரத்தில் வந்த வருமானத்தில் இருந்து மேற்படி கிரயம்

பெறப்பட்டது என்றால், சரியல்ல. அரவக்குறிச்சியில் உள்ள புள்ளப்பாளையம்கிராமத்தில் சர்வே எண். 22, 23 மற்றும் 66யில் உள்ள சொத்துக்களை எனது மாமனார் அனுபவித்து வந்தார்களா என்றால், அனைவரும் அனுபவித்து வந்தார்கள். கடந்த 29.06.2009 தேதியன்று மேற்படி சொத்தினை எனது மாமனார் ஒரு சாமியப்ப குமாரன் கணேசன் என்பவருக்கு விற்பனை செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். தற்போது அந்த சொத்தை கிரயம் பெற்ற கணேசன் என்பவர் அனுபவித்து விவசாயம் செய்து வருகிறார் என்றால், ஆமாம். மேற்படி சொத்தை இவ்வழக்கில் சேர்க்கவில்லைஎன்றால், சரிதான்.

கணேசன் என்பவர் எனக்கு அறிமுகமானவர். சர்வே எண். 559/பி2, 560/பி1, 562/பி ஆகிய சர்வே எண்களில் உள்ள சொத்துக்களை 8வது பிரதிவாதிக்கு விற்பனை செய்த விவரம் தெரியுமா, என்றால் தெரியும். மேற்படி கிரயம் குறித்து நாங்கள் ஆட்சேபணை செய்யவில்லை என்றாலும், இந்த வழக்கில் மேற்படி சொத்துக்களை சேர்க்கவில்லை என்றாலும் , சரிதான். மேற்படி கணேசன் பெயரில் உள்ள கிரயத்தை குறித்தும், ராமசாமி பெயரில் உள்ள கிரய ஆவணத்தை குறித்தும் எங்களது வழக்கில் எந்த பரிகாரமும் கோரவில்லை என்று சொன்னால், சரிதான்.

காளியண்ண கவுண்டர் இறந்த 1989ஆம்ஆண்டில் இருந்து எனது தாயார் வழக்கு தாக்கல் செய்யப்படும் காலம் வரை தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களிலும் எவ்வித பங்கு உரிமையும் கோரவில்லை என்றும், விவசாய வேலைகளில் ஈடுபடவில்லை என்றும் கூட்டுக்குடும்ப அனுபவத்தில் இருந்ததில்லை என்றால், சரியல்ல. எனது தாயார் உரியகாலத்தில் தாவா சொத்துக்கள் குறித்து 1வது பிரதிவாதி பங்கு உரிமை எதுவும் கோரததால் காலவறையறை சட்டத்தின் கீழ் இந்த வழக்கை தாக்கல் செய்தது எனதுதாயார் எவ்வித உரிமையும் கிடையாது என்று சொன்னால், சரியல்ல. எனது தாயார் 1வதுபிரதிவாதி தாவா சொத்தை நீண்ட காலமாக தனிப்பட்ட முறையில் வைத்து அனுபவித்து வருவதை அறித்தும, ஆட்சேபணை செய்யாமலும் தனக்கு

தெரிந்தே இருந்து வந்துள்ளார் என்றாலும், அதனால் தாவா சொத்தில் இருந்து வெளியேற்றப்பட்டவர் என்று கருதப்படுவார் என்றால், சரியல்ல. அதனால் எனது தாயாருக்கு தாவா சொத்தில் எவ்வித பங்கு உரிமையும் இல்லாததால், அவரின் வாரிசு என்ற முறையில் எனக்கும், தாவா சொத்துக்களில் பங்கு உரிமை கோருவதற்கு எவ்வித முகாந்திரம் இல்லை என்று சொன்னால், சரியல்ல. நான் எனது மனைவி மற்றும் எனது தாயாரின் துண்டுகோலாக வைத்துக்கொண்டு 1வது பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து பணம் பறிக்கும் சுபாவமுடையர் என்றால், சரியல்ல. அதனால், இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால், சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

K L PRIYANGA Digitally signed by K L PRIYANGA

முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.